ந. க. எண். 39/2022/அ1

அஞ்சுகிராமம் முதல்நிலை பேரூராட்சி அலுவலகம்,
அஞ்சுகிராமம் – 629401.
நாள்: 28.03.2022

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கன்னியாகுமரி மாவட்டம், அஞ்சுகிராமம் முதல்நிலை பேரூராட்சியில் கீழ்க்கண்ட இனத்திற்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 12.04.2022 ஆம் தேதி பிற்பகல் 3.00 மணி வரையில் நிபந்தனைகளுக்குட்பட்டு வரவேற்கப்படுகிறது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் 12.04.2022 பிற்பகல் 3.30 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்தக்காரர் முன்னிலையில் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் திறக்கப்படும்.

| வ. எண் | இனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை தொகை (ரூ.) | டேவணித் தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1 | பொது சுகாதாரப் பொருட்கள் விநியோகம் செய்தல். | 312 | 10000 |

### நிபந்தனைகள்

1. ஒப்பந்தத்தில் கலந்துக் கொள்பவர்கள் அதற்குரிய வைப்புத் தொகையினை பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி ரசீதை ஒப்பந்த புள்ளியுடன் இணைக்க வேண்டும். பேரூராட்சியால் வழங்கப்படும் ஒப்பந்த நமுனாவில் மட்டுமே ஒப்பந்தம் தாக்கல் செய்யப்பட வேண்டும்.
2. முன் வைப்புத்தொகை செலுத்தாத ஒப்பந்தப்புள்ளி மற்றும் காலம் கடந்து வரும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
3. ஒப்பந்தப்புள்ளியை எந்தவித காரணமும் காட்டாமல் ரத்து செய்யவோ அல்லது ஒத்தி வைக்கவோ செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.
4. ஒப்பந்தப்புள்ளி பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்குட்பட்டது.
5. பொது சுகாதாரப் பொருட்கள் அலுவலகத்தில் கொண்டு கொடுக்கப்பட வேண்டும்.
6. வினியோகம் செய்யப்படும் சாதனங்களுக்கு உத்திரவாத காலம் குறிப்பிட வேண்டும்.
7. வினியோகம் செய்யப்படும் சாதனம் தரம் குறைந்ததாக காணப்பட்டால் அதனை சொந்த செலவிலேயே மாற்றி கொடுக்க வேண்டும்.
8. பேரூராட்சி விதிமுறைகளுக்கு உட்பட்டு உயர் அலுவலர்களின் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கப்படும்.
9. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர்கள் தாங்களே நிறுவனங்களால் அங்கீகாரம் பெற்ற முழு விநியோகஸ்தர்களாக இருத்தல் வேண்டும் (Dealership). அதற்கான சான்று இணைக்கப்பட வேண்டும்.
10. பொருட்கள் சப்ளை செய்ய எந்தவித முன்பணமும் வழங்கப்படமாட்டாது.
11. பொது சுகாதாரப் பொருட்கள் சப்ளை செய்தவுடன் அதற்குரிய சான்று தேவைப்படின் உடன் சான்று பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.
12. சப்ளை செய்யப்படும் சாமான்கள் தரமற்றது என்று கண்டறியப்பட்டால் எவ்வித முன் அறிவிப்புமின்றி டெண்டர் ரத்து செய்யப்பட்டு, மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.
13. டெண்டர் முடிந்து வேலை ஆணை பெற்றவுடன் ரூ.50/–ற்கான பத்திரத்தில் ஒப்பந்தம் கொடுக்க எழுதிக் கொடுக்க வேண்டும்.
14. ISI மற்றும் ISO தரச்சான்று பெற்ற பொருட்கள் மட்டுமே விநியோகம் செய்யப்பட வேண்டும்.

15. முன்னணி நிறுவனங்களின் தயாரிப்புகளை மட்டுமே விநியோகம் செய்ய வேண்டும்.
16. இந்த நிதி ஆண்டில் ஒரு வினியோகஸ்தர் ஒரே தாலுகாவில் உள்ள ஒன்றுக்கு மேற்பட்ட பேரூராட்சிகளில் ஒரு பொருளுக்கு மாறுபட்ட விலை நிரக்கு வழங்கப்பட்டிருந்தது கண்டறியப்பட்டால், வினியோகஸ்தரின் வினியோகம் சீரானதாக இல்லை எனக்கருதி ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதல்ல.
26. வினியோகஸ்தர்களின் RC / TIN, PAN (SARAL), Sales Tax Clearance மற்றும் GST 2021 – 2022 செலுத்தப்பட்ட விபரம் இணைக்கப்பட வேண்டும்.
17. வினியோகஸ்தர்களின் பொருள் தயார் செய்யும் நிறுவனத்தின் ISO Certificate மற்றும் ISI Certificate இணைக்கப்பட வேண்டும்.
18. ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சியால் வழங்கப்படும் ஒப்பந்த நமுனாக்களில் மட்டுமே குறிப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஒப்பந்த நமுனாக்களில் கேட்கப்பட்டுள்ள முழு விபரமும் கண்டிப்பாக தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளி உறையின் மேல் விபரங்கள் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.
19. ஒப்பந்தபுள்ளி பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரம் பெற்ற பின் மட்டுமே குறைந்த நிரக்கு ஒப்பந்தக்காரருக்கு வினியோக உத்தரவு வழங்கப்படும்.
20. ரூ.10,000/–க்கு அதிகமான மதிப்பில் பொருட்கள் சப்ளை செய்தால் உரிய விதிகளுக்குட்பட்டு அனுமதி பெறப்பட்டு பணம் பட்டுவாடா செய்யப்படும்.
21. பொது சுகாதார பொருட்கள் ISI மற்றும் ISO தரச்சான்று பெற்ற பொருட்கள் மட்டுமே விநியோகம் செய்யப்பட வேண்டும்.
22. சப்ளை செய்யப்படும் பொது சுகாதாரப் பொருட்கள் தரமற்றது என்று கண்டறியப்பட்டால் எவ்வித முன் அறிவிப்புமின்றி டெண்டர் ரத்து செய்யப்பட்டு, மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.
23. கூடுதல் விபரங்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில், அலுவலகத்தில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

செயல் அலுவலர்,
அஞ்சுகிராமம் முதல்நிலை பேரூராட்சி.

**பெறுநர்**

1. முன் ஒப்பந்ததாரர்கள்
2. சம்பந்தப்பட்ட நிறுவனங்கள்

**நகல்**

1. செயல் அலுவலர், அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து பேரூராட்சிகள்.
2. கிராம நிர்வாக அலுவலர், அஞ்சுகிராமம் கிராமம் விளம்பரத்துக்காக.
3. ஆணையாளர், அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம், அகஸ்தீஸ்வரம்.
4. அலுவலக விளம்பர பலகை.